JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**C.C. 2/2016**

**A1, A2 absent. Petition U/s.317 of Cr.P.C. filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of **02.02.2026.**

**P.W. 1 Name:** மோகனப்பிரியா **W/o.** பார்த்திபன்

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

என்னிடம் காட்டப்படும் புகார் தான் 29.08.2015 ம் தேதி அன்று காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் ஆகும். **நான் கொடுத்த எழுத்து மூலமான புகாரின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னால் புகைப்படத்தில் அடையாளம் காட்டப்பட்ட 5 ¼ பவுன் செயினை தான் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச் சென்றேன். **புகைப்படம் (எண்ணிக்கை 2) அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை சென்னிமலை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் 29.08.2015 ம் தேதி மற்றும் 28.09.2015 ம் தேதி சென்னிமலை காவல் நிலைய ஆய்வாளர் விசாரித்த போது நடந்த விவரங்களை கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னப்பா வைத்துள்ள கடையின் பெயர் பாரத் கார்மென்ட்ஸ் என்று சொல்லுவார்கள். 2015 ஆம் ஆண்டு எத்தனை பேர் பணி புரிந்தார்கள் என்றால் சுமார் 10 பேர் பணிபுரிந்தார்கள். காலையில் வந்துவிட்டு மாலை 5 மணி வரை வேலை செய்துவிட்டு செல்வார்கள் என்றால் சரிதான். நான் குடியிருப்பது ஊத்துக்குளி ரோடு என்றால் சரிதான். என்னுடைய வீட்டிலிருந்து குமராபுரிக்கு மெயின் ரோடு வழியாக வரலாம் என்றால் சரிதான். சம்பவசாலை போக்குவரத்து நிறைந்த சாலை இல்லை என்றால் சரிதான். அங்கு இருக்கக்கூடிய பெரிய கார்மெண்ட்ஸ்களில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு மகன்கள் சம்பவத்தின் போது ஒரு மகனுக்கு ஏழு வயது மற்ற மகனுக்கு ஐந்து வயதும் இருக்கும். இரண்டு மகன்களையும் அழைத்துக் கொண்டுதான் இரு சக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் நான் தனியாக சென்றதாக சொல்லி உள்ளேன் என்றால் குழந்தைகளுடன் சென்றதாகத்தான் குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ.1 புகாரில் இரண்டு மகன்கள் உடன் சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அ.சா.ஆ.1 புகாரை படித்து விட்டு சாட்சி சரிதான் என்று தெரிவித்தார். அ.சா.ஆ.1 புகார் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல நான் தான் கொடுத்தேன்.

3. சம்பவத்தின் போது நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் பெயர் தற்போது நினைவில் இல்லை. சம்பவம் நடந்த ரோடு கிழ மேல் திசை என்றால் சரிதான். நான் மேற்கிலிருந்து கிழக்காக சென்றேன் என்றால் சரிதான். சாட்சி சொல்ல வந்துள்ள மது மற்றும் நாகராஜ் எந்த திசையில் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. வண்டியிலிருந்து கீழே விழுந்து எனக்கும் ,குழந்தைகளுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. நான் வண்டியில் இருந்து கீழே விழுந்து விட்டேன் என்றால் சரிதான். செயினை பறித்துக் கொண்டு சென்று விட்டார்கள் என்றால் சரிதான். எனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டு விட்டது என்றால் இல்லை.

4. நகை 5 1/4 பவுன் என்றால் சரிதான் . செயின் கட் ஆகி எதிரிகளிடமே போய்விட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து நான் பெற்றுக் கொண்ட செயின் கட்டாகவில்லை என்றால் சரியல்ல அறுந்து இருந்தது. மேற்படி செயின் எந்த கடையில் வாங்கப்பட்டது, அதன் வகை என்ன என்பது பற்றி புகார் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்துக்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் இரவு சுமார் 8 மணி இருக்கும். புகாரில் திருடன் திருடன் என்று சத்தம் போடவில்லை என்றால் சரிதான் சத்தம் மட்டும் போட்டேன். நான் சத்தம் போடும்போது அக்கம் பக்கத்தில் சுமார் பத்து நபர்கள் கூடி இருப்பார்கள் என்றால் சரிதான். செயினை பறித்ததாக சொல்லக்கூடிய நபர்கள் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் பதிவு எண்ணையும் மறைக்கவில்லை என்றால் சரிதான்.

5. சம்பவ இடத்திற்கு அருகில் பாலமுருகன் தியேட்டர் உள்ளது என்றால்

சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் பெருந்துறை to சென்னிமலை செல்லும் பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து 100 அடி தூரத்தில் மேற்கே பெருந்துறை to சென்னிமலை பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த சாலை பெருந்துறை வரை ஒரே நேர்ரோடு என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் மேற்படி சாலையில் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். எத்தனை மணி நேரம் காவல் நிலையத்தில் இருந்திருப்பேன் என்றால் சுமார் 1/2 – 1 மணி நேரம் இருந்திருப்பேன். அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கையில் கையெழுத்து செய்தேன் என்றால் நினைவில் இல்லை. புகாரில் உள்ள வாசகங்கள் போலீசார் சொல்லி எழுதப்பட்டதா என்றால் என்னால் எழுதப்பட்டது.

6. அ.சா.ஆ.1 புகாரில் செயினை பறித்து சென்ற நபர்களின் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு சொல்லிவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு என்ன வயது இருக்கும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இன்று சாட்சி சொல்ல வந்த சாட்சிகள் எனக்குத் தெரிந்த நபர்கள் என்றால் சரியல்ல. போலீசார் எத்தனை முறை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள் என்றால் இரண்டு முறை. இரண்டு முறையும் பெயர் விலாசம் வாங்கிக் கொண்டு என்னை அனுப்பி விட்டார்கள் என்றால் சரிதான். வேறு எதையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் எதிரிகளை என்னிடம் அடையாளம் காட்டினார்கள் நான் போலீசாரிடம் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான்.

7. இரண்டாவது முறை போலீஸார் விசாரிக்கும் போது என் கணவரை அழைத்து சென்று இருந்தேன் என்றால் ஆமாம். இன்று சாட்சி சொல்ல வந்த சாட்சிகள் போலீசார் விசாரிக்கும் போது வந்திருந்தார்களா என்றால் இல்லை. செயினை பறித்த நபர்கள் என்ன வண்டி ஓட்டி வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக போலீசார் சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தாங்களா என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது.போலீசாரை அழைத்துச் சென்று சம்பவ இடத்தை காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை